SINGAPORE – CAMBRIDGE
General Certificate of Education Ordinary Level

# உயர்தமிழ் 1147/2

தாள் 2

**HIGHER TAMIL**
Paper 2

**SPECIMEN PAPER**
*With effect from 2024 examination*

**1 hour 45 minutes**

Additional Materials: Answer Booklet

**தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்**

1 ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளை நன்கு படித்துப் புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

2 விடைகள் அனைத்தையும் கொடுக்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் எழுத வேண்டும்.

3 பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத எந்தவொரு விடைப்புத்தகத்தையும் தேர்வு நடைபெறும் மண்டபத்திலிருந்தோ அறையிலிருந்தோ வெளியே எடுத்துச் செல்லக்கூடாது.

இவ்வினாத்தாள் 9 அச்சிடப்பட்ட பக்கங்களையும் 3 அச்சிடப்படாத பக்கங்களையும் கொண்டுள்ளது.

Singapore Examinations and Assessment Board

©MOE

## ‘அ’ பிரிவு

**A1 முன்னுணர்வுக் கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)**

பின்வரும் பனுவலில் ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் மிகப் பொருத்தமான சொல்லைக் கொண்டு நிரப்பவும்.

வணக்கம் மாணவர்களே! பல மாதங்களாகப் பல்வேறு சவால்களைக் கடந்து இன்று நீங்கள் விளையாட்டுப்போட்டியில் வாகை சூடியுள்ளீர்கள். மனமார்ந்த வாழ்த்துகள்! இந்த வெற்றி இத்துடன் நின்றுவிடக்கூடாது. வெற்றியின் உச்சத்தைத் தொட்டவர்களின் வாழ்க்கையை உற்றுநோக்கினால் இரண்டு செய்திகள் புலனாகும். ஒன்று, சிலர் வெற்றியைக் கடின உழைப்பாலும் விடாமுயற்சியாலும் **(1)**__________. இரண்டு, சிலர் திறமை வாய்ந்தவர்களுடன் இணைந்து செயற்பட்டு வெற்றியைத் தழுவியிருப்பார்கள். அதே வேளையில், வாழ்க்கையில் எவ்வளவு உயர்ந்தவர்களாக **(2)**__________ ஏதேனும் ஒருவகையில் தோல்வி என்னும் கசப்பான மருந்தை அவர்கள் சுவைக்காமல் இருந்திருக்கமாட்டார்கள்.

தோல்வி எப்போதும் **(3)**__________ வருவதில்லை. அது மனச்சோர்வு, தாழ்வு மனப்பான்மை முதலானவற்றையும் உடன்கொண்டு வருகிறது. அவ்வேளைகளில் நாம் தோல்வியைக் கண்டு அஞ்சாது அதனைப் படிப்பினையாக ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தைப் பெற்றிருப்பது அவசியம். அப்போதுதான் வாழ்வில் **(4)**__________ சவால்மிக்க சூழல்களைத் திறம்படக் கையாள இயலும். மேலும், பெரியோர்களின் அனுபவங்களைக் கேட்பதோடு நல்ல நூல்களை **(5)**__________ வந்தால் நாம் நம்மைப் பல துன்பங்களிலிருந்து காத்துக்கொள்ளலாம். இதனை உணர்ந்து செயற்படுவீர்கள் என நம்புகிறேன். நன்றி.

**A2** பிழை திருத்தம் **(10 மதிப்பெண்கள்)**

பின்வரும் பனுவலின் இடப்பக்கத்தில் வினாக்களின் எண்கள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு வினா எண்ணின் எதிரிலும் உள்ள வரியில் பிழையான சொல் ஒன்று உள்ளது. அப்பிழையான சொல்லைத் திருத்திச் சரியான சொல்லை எழுதவும்.

| | |
|---|---|
| | இன்று விளம்பரங்களின் செல்வாக்கு எண்ணிப்பார்க்க முடியாத அளவுக்குப் |
| | பெருகியுள்ளது. ஒரு சில நொடிகளிலேயே வாடிக்கையாளரது கவனத்தை |
| **(6)** | முற்றிலுமான ஈர்ப்பதில் விளம்பரங்கள் வெற்றி கண்டுள்ளன. இந்தக் கவன ஈர்ப்பு |
| | விளம்பரதாரர்களுக்குச் சாதகமாக அமையலாம். அக்காலத்தில் அச்சு |
| **(7)** | விளம்பரங்கள் மக்களைக் கவரும் தன்மை கொண்டதாகக் கருதப்பட்டன. |
| | இன்றோ இணையத்தில் வெளிவரும் விளம்பரங்களே மக்களை அதிகம் |
| **(8)** | கவர்கின்றன. குறைந்த செலவிலும் அதிகச் சிரமமில்லாமல் மக்கள் தாம் விரும்பும் |
| | பொருள்களை வாங்கலாம் என்பதே அதற்குக் காரணங்களாகும். ஆனால், |
| | இணையத்தைப் பயன்படுத்துவோருள் சிலர் இணையத்தில் செய்திகளைவிட |
| | விளம்பரங்களே அதிகளவு இடம்பெறுவதாகக் குறைபட்டுக்கொள்கின்றனர். |
| | அவர்கள் செய்தி ஒன்றினை ஆழ்ந்து படிக்கும்போது இடையிடையே வரும் |
| **(9)** | விளம்பரங்கள் அவர்களை எரிச்சல் ஊட்டுவனவாக அமைகின்றன. பெரும்பாலோர் |
| | இத்தகைய விளம்பரங்களில் இடம்பெறும் பொருள்கள்மீது ஈர்க்கப்பட்டு அவற்றை |
| | வாங்குவதற்குத் தூண்டுகின்றனர். எனவே, இணையத்தின் வாயிலாகப் |
| **(10)** | பொருள்களை வாங்குவதற்குமுன் ஒருவர் சிந்தித்துச் செயற்பட வேண்டும். |

(அடுத்த பக்கம் பார்க்கவும்)

## ‘ஆ’ பிரிவு

**B3 சொற்புணர்ச்சி** **(10 மதிப்பெண்கள்)**

பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதவும்.

**11** பட்டாடை

**12** கூட்டுப்பறவை

**13** அறவொழுக்கம்

**14** சுழற்காற்று

**15** மனங்குளிர

## ‘இ’ பிரிவு

**C4 கருத்தறிதல் 1** **(22 மதிப்பெண்கள்)**

பின்வரும் பனுவலைக் கருத்தூன்றிப் படித்து அதையொட்டிய வினாக்களுக்குச் சொந்த நடையில் விடை எழுதவும்.

| **குறிஞ்சி மின்னிதழ்** | **உங்கள் கருத்து…** | **சிறப்புக் கட்டுரைகள்** | **கடந்த இதழ்கள்** |
|---|---|---|---|
| **தமிழர் சிந்தனை** | | | |
| அண்மையில் நான் பழந்தமிழர் வாழ்வியல்முறை குறித்த ஒளிக்காட்சி ஒன்றைப் பார்த்தேன். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அறிவியல் அதிகம் வளர்ச்சியடையாத நிலையிலும் பழந்தமிழர்கள் அறிவியல் நுண்ணறிவு மிக்கவர்களாகத் திகழ்ந்தனர் என்பதை அதன் வாயிலாக அறிந்து வியந்தேன்.<br><br>ஆய்வுக்கூடங்களும் நவீனக்கருவிகளும் இல்லாத நிலையிலும் பழந்தமிழர்கள் வானவியல், சித்த மருத்துவம் எனப் பலவற்றில் அளப்பரிய சாதனைகளைப் புரிந்திருக்கின்றனர். இதனை அறிவியல் கண்கொண்டு ஆராய்ந்தால் மலைப்பே மிஞ்சும். பல துறைகளில் அவர்கள் ஆற்றிய பங்களிப்பின்வழி அவர்களது நுட்பமான அறிவுத்திறனையும் அவர்கள் தங்கள் நேரத்தை ஆக்கபூர்வமான பணிகளில் செலவிட்டதையும் அறியமுடிகிறது.<br><br>ஒவ்வோர் ஊரிலும் வளரும் ஆயிரக்கணக்கான தாவரங்களின் இலை, பூ, காய், கனி, தண்டு, வேர் முதலானவற்றின் தன்மைகளை ஆய்ந்தவர்கள் பழந்தமிழர்கள். அவை ஒவ்வொன்றிலும் உள்ள மருத்துவக்குணத்தைக் கண்டறிந்து அவற்றைப் பயன்படுத்திய விதம் மெச்சத்தக்கது; அவர்களது அறிவாற்றலையும் புலப்படுத்துகிறது. அவர்கள் | | | |

கண்டறிந்தவற்றுள் சிலவற்றை அன்றே ஆவணப்படுத்தியுள்ளனர். அவற்றிலுள்ள செய்திகளை அறிந்துகொண்டு பயன்பெறுவதற்கு இன்றைய இளைய தலைமுறையினர் முனைப்புக் காட்டுவது பெருமைக்குரியதே. பாம்புக்கடிக்கு எந்த மூலிகைச் செடியைப் பயன்படுத்தினால் நச்சுத்தன்மை முறியும் என்பதைக் கண்டறியப் பழந்தமிழர்கள் செய்த எண்ணற்ற சோதனைகள் பற்றி நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்? அத்தகைய சோதனைகளை ஆவணப்படுத்தியது இன்று புதுப்புதுச் சோதனைகளை மேற்கொள்வதற்கு வழிவகுத்துள்ளது.

மனிதன் சுவாசிக்கும் முறையையும் மூச்சுக்காற்றின் தன்மையையும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நம் முன்னோர் கண்டறிந்துள்ளனர். ஒவ்வொரு நாளும் மனிதன் தன் மூக்கிலுள்ள இரண்டு துவாரங்கள் வழியாக ஒரே நேரத்தில் மூச்சுக்காற்றை உள்ளே இழுத்து வெளியே விடுவதாகப் பலரும் கருதுகின்றனர். ஆனால், அது உண்மையன்று. ஒரு குறிப்பிட்ட நேரத்தில் இடது துவாரம் வழியாகவும் மற்ற நேரத்தில் வலது துவாரம் வழியாகவும் மூச்சுக்காற்றுச் சென்றுவருவதை நம் முன்னோர் கண்டறிந்துள்ளனர். மேலும், மூச்சுக்காற்றின் இயக்கம் ஒவ்வொரு நாளும் வேறுபடுகிறதாம். உடல்நலமும் மனநலமும் மூச்சுக்காற்றின் தன்மையைச் சார்ந்திருக்கிறது என்பதைக் கண்டறிந்து உலகுக்குப் பறைசாற்றிய பழந்தமிழர்களது அறிவியல் சிந்தனை வியப்புக்குரியதன்றோ?

பழந்தமிழர்கள் தங்கள் அறிவியல் சிந்தனைகளை இலக்கியங்கள், கல்வெட்டுகள் முதலானவற்றின்வழி ஆவணப்படுத்தாமல் இருந்திருந்தால் அவற்றைக் கற்பனை எனக் கருதி உலகம் நிராகரித்திருக்கும். இருப்பினும், பழந்தமிழர்கள் தங்களது மருத்துவமுறை எல்லாவற்றையும் முறையாக ஆவணப்படுத்தவில்லை. அதனால், அவர்களது மருத்துவ அறிவைப் பிற நாட்டினர் முழுமையாக அறிந்துகொண்டு பயன்பெற இயலாமல் போனது. மனிதகுலம் உய்ய வழிவகுக்கும் நம் முன்னோரது அறிவியல் செய்திகளை முறையாக ஆவணப்படுத்தி அவற்றை எட்டுத் திக்கும் எடுத்துச் செல்ல வேண்டும். அப்போதுதான் நம் முன்னோர் உலகிற்கு வழங்கியுள்ள அறிவியல் செல்வங்கள் பிற நாட்டினருக்கும் பயன் தருவனவாக அமையும்.

**பார்த்திபன்**

(அடுத்த பக்கம் பார்க்கவும்)

**<u>வினாக்கள்</u>**

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு தெரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடைக்குரிய எழுத்தை மட்டும் எழுதவும்.

**16** கட்டுரையாசிரியருக்கு எது வியப்பளிக்கிறது? (2 மதிப்பெண்கள்)

(A) பழந்தமிழர்கள் தங்கள் ஓய்வுநேரத்தை ஆக்கபூர்வமான பணிகளில் செலவிட்டது
(B) அறிவியல் வளர்ச்சியடையாத காலத்தில் பழந்தமிழர்கள் அறிவியல் துறையில் சாதித்தது
(C) பழந்தமிழர்கள் பற்பல துறைகளில் செய்த சாதனைகள் பற்றிய சான்றுகள் கிடைத்தது
(D) ஆய்வுக்கூடங்களும் அறிவியல் சாதனங்களும் இன்றிப் பழந்தமிழர்கள் அறிவியல் பணிகளில் ஈடுபட்டது

**17** தாவரங்கள் குறித்த பழந்தமிழர்களது அறிவாற்றல் எதற்கு உதவியது? (2 மதிப்பெண்கள்)

(A) தாவரங்களைப் பலமுறை சோதித்துப் பார்க்க
(B) தாவரங்களின் மருத்துவக்குணத்தை ஆவணப்படுத்த
(C) தாவரங்களின் பல்வேறு பாகங்களை மருந்தாகப் பயன்படுத்த
(D) தாவரங்களின் தன்மைகளைக் கண்டறிந்து அவற்றை வளர்க்க

**18** பின்வரும் வாக்கியங்களுள் எது பழந்தமிழர்களது கருத்தாக அமைந்துள்ளது? (2 மதிப்பெண்கள்)

(A) மூச்சுக்காற்றின் இயக்கம் ஒவ்வொரு நாளும் ஒரே மாதிரி இருப்பதில்லை
(B) மனிதன் மூச்சுக்காற்றை அன்றாடம் குறிப்பிட்ட நேரத்தில் இயக்குகிறான்
(C) மூச்சுக்காற்றின் இயக்கத்துக்கும் உடல் ஆரோக்கியத்துக்கும் தொடர்பில்லை
(D) மனிதன் ஒரே நேரத்தில் மூச்சுக்காற்றை உள்ளே இழுத்து வெளியே விடுகிறான்

**19** பின்வரும் வாக்கியத்திலுள்ள எழுவாய், எதிர்மறை வினையெச்சம் ஆகியவற்றைக் கண்டறிந்து எழுதவும். (4 மதிப்பெண்கள்)

*பழந்தமிழர்கள் தங்கள் அறிவியல் சிந்தனைகளை இலக்கியங்கள், கல்வெட்டுகள் முதலானவற்றின்வழி ஆவணப்படுத்தாமல் இருந்திருந்தால் அவற்றைக் கற்பனை எனக் கருதி உலகம் நிராகரித்திருக்கும்.*

**(i)** எழுவாய்
**(ii)** எதிர்மறை வினையெச்சம்

**20** **சுருக்கி வரைதல்** (12 மதிப்பெண்கள்)

பழந்தமிழர்கள் தங்கள் அறிவியல் கண்டுபிடிப்புகளை ஆவணப்படுத்தியதால் விளைந்த பயன்கள் குறித்துக் கட்டுரையாசிரியர் கூறியுள்ளவற்றைப் பொருள் பிறழாது உன் சொந்த நடையில் 40 சொற்களில் சுருக்கி எழுதவும்.

**C5** **கருத்தறிதல் 2** **(28 மதிப்பெண்கள்)**

பின்வரும் பனுவலைக் கருத்தூன்றிப் படித்து அதையொட்டிய வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதவும்.

பணியிடம் என்பது சிங்கப்பூரர்கள் பலருக்கு இரண்டாவது வீடாக விளங்குகிறது. இன்றைய பரபரப்பான வாழ்க்கைமுறையில் சிலருக்கு வீடென்பது ஓய்வெடுப்பதற்கான இடமாகவே இருக்கிறது. ஒருவரது வளமான எதிர்காலம் அவர் தமது பணியில் பெறும் வெற்றியைப் பொறுத்தே அமைகிறது எனப் பலரும் கருதுகின்றனர். தனிமனித முன்னேற்றமே நாட்டு முன்னேற்றத்திற்கு **<u>அடிப்படை</u>** என்பதை நாம் மறுக்கவியலாது. அதனாலன்றோ, தனிமனிதனின் முன்னேற்றத்திற்குத் துணைநிற்கும் வாழ்க்கைத்தொழில் பற்றிய சிந்தனைக்கும் திறன் மேம்பாட்டுத் திட்டத்திற்கும் அரசாங்கம் முக்கியத்துவம் அளிக்கிறது.

வாழ்க்கைத்தொழிலுக்கு உரிய பாதைகளைத் தேர்ந்தெடுக்கப் பல வழிகாட்டுத் திட்டங்கள் இளைஞர்களுக்கென உருவாக்கப்பட்டுள்ளன. அத்திட்டங்களைப் பயன்படுத்தி வாழ்க்கையில் மேம்பட விழையும் இளைஞர்கள் பலருண்டு. அத்தகையோர் கல்வியை வாழ்க்கைத்தொழிலுக்குத் தயார்செய்யும் கருவியாகக் கருதிப் பல்வேறு கல்விப் பாதைகளை ஒப்பிட்டுப் பார்க்கின்றனர். பிறகு, தங்கள் தொழிலுக்குரிய பாடங்களைத் தேர்ந்தெடுத்துப் பயில்கின்றனர். அத்தகைய இளைஞர்களே தாங்கள் விரும்பும் துறையில் பணியாற்றும்போது தங்கள் முழுத்திறனையும் **<u>வெளிக்கொணரும்</u>** வாய்ப்பைப் பெறுகின்றனர்.

இளைய தலைமுறையினர் எதிர்காலத்திற்குத் தேவைப்படும் திறன்களை அறிந்து கற்பது அவசியம். ஏனெனில், வாழ்க்கைத்தொழிலானது மாற்றங்களுக்கு உட்பட்டது. வயது, ஆர்வம், அனுபவம், மாறிவரும் தொழிலியல் தேவைகள் முதலானவற்றைப் பொறுத்து மாற்றங்கள் நேரலாம். அம்மாற்றங்களை உணர்ந்து தம்மைத் தேவைக்கேற்பத் தயார்செய்துகொள்வோரே வெற்றிக்கனியைச் சுவைப்பர். மேலும், தவிர்க்கவியலாத காரணங்களால் தம் பணியை இழக்க நேரும் ஒருவர் காலத்துக்கேற்ற புதிய திறன்களைக் கற்றுத் தம்மை மேம்படுத்திக்கொண்டு புதிய பணியைத் தேடுவது முக்கியம். அதைத்தான் அரசாங்கமும் வலியுறுத்துகிறது. அத்தகைய சூழ்நிலையில் புதிய திறன்களைக் கற்றுக்கொள்வதால் பல **<u>இன்னல்களைத்</u>** தவிர்க்கலாம். இந்நிலையில் புதிய திறன்களைக் கற்றுக்கொண்டு தமக்கேற்ற வாழ்க்கைத்தொழிலில் ஈடுபடுவோர் மனத்தளவில் ஊக்கம் பெற்று உழைப்பதோடு தம் பொருளாதார நிலையையும் உயர்த்திக்கொள்கின்றனர்.

(அடுத்த பக்கம் பார்க்கவும்)

சிங்கப்பூரின் ஊழியரணி **<u>இடைவிடாது</u>** தன்னைத்தானே புதுப்பித்துக்கொள்ள வேண்டும். இல்லாவிடில், நாட்டின் பொருளியல் நிலைத்தன்மை பாதிப்புறும். மாறிவரும் உலகப் பொருளியல் சூழலில் புதுப்புதுத் துறைகளும் அவை சார்ந்த பணிகளும் உருவாகின்றன.

அத்துறைகள் சார்ந்த பணிகளில் ஈடுபட எத்தகைய திறன்கள் தேவை என்பதை ஊழியர்கள் சிலர் அறியாதிருக்கலாம். அத்தகையோர் வாழ்க்கைத்தொழில் ஆலோசகர்களின் சேவைகளைப் பெற அரசாங்கம் பல வழிகளில் உதவுகிறது. வாழ்க்கைத்தொழில் ஆலோசகர்கள் பணிமாற்றம் செய்ய எண்ணுவோருக்குத் தகுந்த ஆலோசனை தந்து பொருத்தமான பணிகளைத் தேர்ந்தெடுக்க உதவுகின்றனர். ஒருவர் தமக்கேற்ற பணியில் ஈடுபடுவது முக்கியம். இல்லையேல், மனம் அப்பணியை ஏற்காது; மனநிறைவும் கொள்ளாது. அந்நிலையைத் தவிர்க்க ஆலோசகர்களது சேவை கைகொடுக்கும். ஆலோசகர்கள், ஊழியர்கள் ஆகியோரது கூட்டுறவு நாட்டின் உற்பத்தித்திறனைப் பெருக்கிப் பொருளியல் வளர்ச்சிக்கு வழிகோலும்.

<u>வினாக்கள்</u>

**21** ஒருவர் செய்யும் பணி ஏன் முக்கியமானதாகக் கருதப்படுகிறது? (5 மதிப்பெண்கள்)

**22** இளைஞர்கள் தமக்கேற்ற வாழ்க்கைத்தொழில்களைத் தேர்ந்தெடுக்கச் செய்ய வேண்டியவை யாவை? (6 மதிப்பெண்கள்)

**23** மேற்கண்ட பனுவலைப் படித்த குமரனும் அமுதாவும் கருத்துரைக்கின்றனர்.



குமரன்

இனிவரும் காலங்களில் இளைஞர்கள் தம் வாழ்க்கைத்தொழிலில் வெற்றிபெறுவது கடினம்.

குமரன், உன் கருத்தை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன். அவர்களால் நிச்சயம் வெற்றிபெற முடியும்.



அமுதா

குமரனின் கருத்தை அமுதா ஏற்றுக்கொள்ளாததற்கான இரண்டு காரணங்களைப் பனுவலை அடிப்படையாகக்கொண்டு எழுதவும். (4 மதிப்பெண்கள்)

**24** வாழ்க்கைத்தொழில் ஆலோசகர்கள் நாட்டின் பொருளியல் வளர்ச்சிக்கு எவ்வாறு பங்காற்றுகிறார்கள்? (5 மதிப்பெண்கள்)

**25** <u>சொற்பொருள்</u> (8 மதிப்பெண்கள்)

பின்வரும் சொற்கள் மேற்கண்ட பனுவலில் இடம்பெற்றுள்ளன. அவை உணர்த்தும் பொருளை எழுதவும்

**(i)** அடிப்படை

**(ii)** வெளிக்கொணரும்

**(iii)** இன்னல்களை

**(iv)** இடைவிடாது

முற்றும்

**BLANK PAGE**

**BLANK PAGE**

**BLANK PAGE**

*Copyright Acknowledgements:*

The Singapore Examinations and Assessment Board has made every effort to trace copyright holders, but if we have inadvertently overlooked any, we will be pleased to make the necessary arrangements at the first opportunity.